## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 35/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜுன் மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கையா | மதம் | : |
| த/பெ | : ரங்கையா | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**13.06.2024**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து எனக்கு சொந்தம் என்பதை காட்ட வா.சா.ஆ1 பட்டாவை தவிர வேறு கிரைய ஆவணமோ அல்லது இதர பதிவு ஆவணமோ இல்லை என்றால் சரிதான். அது பூர்வீக சொத்து என்பதால் பட்டா மட்டும்தான் உள்ளது. தாவா சொத்து எனக்கு பூர்வீகம் என்பதை காட்ட என் முன்னோர்கள் பெயரில் இருந்த ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் முன்னோர்கள் பெயரில் பட்டா, ரசீதுகள் உள்ளது.

2. என் முன்னோர்கள் பெயரில் இருந்த பட்டா, ரசீதுகள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் முன்னோர்கள் பெயரில் எதுவும் இல்லை. ஏற்கனவே பிரதிவாதி தாக்கல் செய்த மு.வ.எண்.32/2012 வழக்கில் நான் எதிர்வாதுரை தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.32/2012 வழக்கில் எதிர் வழக்குரையில் கிழ மேல் தெற்கு பக்கம் 32 அடி வடக்கு பக்கம் 35.6

அடி எனவும் வடக்கு தெற்கு 48 அடி எனவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.32/2012 ன் எதிர்வழக்குரையில் கிழ மேல் தெற்கு பக்கம் 32 அடி வடக்கு பக்கம் 35.6 அடி எனவும் வடக்கு தெற்கு 48 அடி எனவும் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் கிழ மேல் 48 அடி தென் வடல் கிழக்கு பக்கம் 32 அடி மேற்கு பக்கம் 35 1/4 அடி எனவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தென் வடல் கிழக்கு பக்கம் 42 அடி மேற்கு பக்கம் 35 1/4 அடி ஆகும். என்னுடைய சொத்து அளவை என்னால் சரியாக சொல்ல முடியவில்லை என்றாலும் பிரதிவாதி வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது கிழ மேல் 3 அடி தென் வடல் 20 அடி பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தென் வடல் 3 அடி கிழ மேல் 42 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவதுதான் நான் தாக்கல் செய்த பிராது என்றால் (**வழக்கில் அசல் பிராது சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது**) சரிதான். ஆனால் அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளது. எனது பிராது சொத்து விவரம் வடக்கு தெற்கு 3 அடி கிழக்கு மேற்கு 20 அடி என காட்டியுள்ளேன் என்றால் அதை பின்பு திருத்தியுள்ளேன்.

5. ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது எனது பிராது சொத்து விவரத்தில் பி அட்டவணையில் வடக்கு தெற்கு 3 அடி கிழக்கு மேற்கு 20 அடி என காட்டியுள்ளேன் என்றால் முதலில் கொட்டகைப்

போட்ட இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்திருந்தேன். காலி இடத்திற்கு தாக்கல் செய்யவில்லை. பிற்பாடு பிராது சொத்து விவரத்தை திருத்தியுள்ளேன். நான் ஆரம்பத்தில் வழக்கு தாக்கல் செய்யும் போது எனது பிராது சொத்து விவரத்தில் பி அட்டவணையில் வடக்கு தெற்கு 3 அடி கிழக்கு மேற்கு 20 அடி பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. வழக்கிற்கு பின்பு நீதிமன்ற ஆணையர், நில அளவையர் தாவா சொத்தை பார்வையிட வந்திருந்தனர் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் கிழமேல் 14.4 மீட்டர் தென்வடல் 0.7 மீட்டர் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு என என் தரப்பு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அவ்வாறு எந்த ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படுவதுதான் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணைகள் என்றால் **(நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு கொடுக்கப்பட்ட ஆட்சேபணை சாட்சியிடம் படிக்க கொடுக்கப்பட்டது)** நான் ஆட்சேபணை செய்யவில்லை.

7. நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை செய்யவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு என ஆட்சேபணை தாக்கல் செய்துவிட்டு, நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் படி பிராதில் தென்வடல் 0.7 மீட்டர் கிழக்கு மேற்கு 14.4 மீட்டர் என வழக்கு பி அட்டவணை சொத்து விவரத்தை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்திற்கு தெற்கே

**ஜெயம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஜெயம்மாளை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.**

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)